DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No.201/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.15**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரெங்கசாமி | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 18.12.2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது காகலனி கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்கள் ஊரை சேர்ந்த தெட்சிணாமூர்த்தியை எனக்கு தெரியும். இறந்து போன அய்யப்பனை எனக்கு தெரியும். 27.03.2021ம் தேதி எத்தனை மணி இறந்தார் என்று தெரியாது. நான் வெளியூரில் இருந்தேன் அதனால் எனக்கு சம்பவம் தெரியாது. ரஜிபானி ,கௌதமி எனக்கு தெரியாது. தமிழரசனை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் அந்த ஆவணத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ. 2** ஆகும். அந்த கையெழுத்து நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

ஆய்வாளர் என்னை விசாரணை செய்ததாகவும் அப்போது 28.03.2021ம் தேதி நானும், பிச்சைகண்ணு மகன் தமிழரசனும் செறுநல்லூர் மேலத் தெருவில் ரஜிபானி வீட்டிற்கு முன்பு

ஆய்வாளர் கைது செய்தார் என்றும், அப்போது ரஜிபானியும், கௌதமியும் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்தார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் நானும் தமிழரசனும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றும், கூறிவிட்டு தற்சமயம் எதிரிகள் கேட்டு கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No.201/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.14**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 18.12.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது காகலனி புள்ளையார் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். எங்கள் ஊரை சேர்ந்த தெட்சிணாமூர்த்தியை தெரியும். அவர் மகன் இறந்து போன அய்யப்பனை எனக்கு தெரியும். அவர் எப்படி இறந்து போனர் என்றால் அவர் சரநல்லூர் கீழத் தெருவில் தூக்கு மாட்டி இறந்ததாக கேள்விபட்டோம். நாங்கள் சென்று பார்க்கும் போது போஸ்மாடத்திற்கு உடலை கொண்டு வந்துவிட்டார்கள். 27.03.2021 இரவு சென்று பார்த்தோம். மறுநாள் நாகை மருத்துவமனைக்கு வந்துவிட்டு சம்பவ இடத்தை போலீசார் காட்ட சொன்னார்கள். அந்த இடத்தை காட்டினேன். அவர்கள் படம் வரைந்து ஆய்வு செய்தார்கள். என்னுடன் தமிழரசன் என்பவரும் இருந்தார். அந்த பார்வை மகஜரில் நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் **அ.சா.ஆ.1** ஆகும். அப்போது அங்கு ரஜிபானி இல்லை. என்னை ஆய்வாளர் இது சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையெப்பம் செய்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.1 ஏற்கனவே காவல்நிலையத்தில் எழுதி கொண்டு வரப்பட்டு கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். அதில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. சம்பவ இடம் செல்லாமல்

காவல் நிலையத்தில் கையெப்பம் செய்துவிட்டு போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க முதல் விசாரணையில் சம்பவ இடத்தில் கையெழுத்திட்தாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.